

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2025) நாகப்பட்டினத்தில், நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான கௌதமன் அவர்களின் மகன் மகிபாலன் – உமா மகேஸ்வரி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள் முனைவர் க. பொன்முடி, எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ். இரகுபதி, அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், எஸ்.எஸ். சிவசங்கர், முனைவர் கோவி. செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் பன்னீர்செல்வம், முகமது ஷாநவாஸ், பூண்டி கே. கலைவாணன், காதர் பாட்சா முத்துராமலிங்கம், திரு. நாகை மாலி, துரை சந்திரசேகர், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2025) நாகப்பட்டினத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கும்பகோணம் கோட்டத்தின் சார்பில் 105 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் முகமது ஷாநவாஸ், நாகை மாலி, துரை சந்திரசேகர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கழகத் தலைவர் - முதலமைச்சர் பிறந்த நாள் விழா!

## துணை முதலமைச்சர் பேச்சு!

10 - ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒரு வருடத்திற்கு முன்பு தமிழ்நாடு என்ற வார்த்தையை மாற்ற வேண்டும் என்று சொன்னார். தமிழ்நாடு என்ற பெயர் எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னார். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் எதிர்ப்பு தெரிவித்தவுடன் உடனே மன்னிப்பு கேட்டார். இப்போது என்ன சொல்கிறார்? தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடக்கூடாது என்று சொல்கிறார்.

இன்றைக்கு இந்த நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன்பு, நாமெல்லாம் ஒற்றுமையோடு, எழுச்சியோடு, மொழி உணர்வோடு தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடினோம். ஆனால் இங்கு இருக்கின்ற ஆளுநர் என்ன சொல்கிறார்? தமிழ்த்தாய் வாழ்த்தை சட்டமன்றத்தில் பாடக்கூடாது என்று சொல்கிறார். அதற்காக சட்டமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்கிறார். ஆனால் நம் முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு ஒரே ஒரு கோரிக்கை மட்டும் வைத்து இருக்கிறார். தயவுசெய்து வருகின்ற சட்டமன்ற தேர்தல் வரைக்கும் இவர்கள் இருவரையும் மாற்றி விடாதீர்கள். யார் என்று பார்த்தால் ஆளுநர் ரவி அவர்களையும், பாஜக மாநில தலைவர் அவர்களையும் தயவு செய்து மாற்றி விடாதீர்கள், அவர்கள் இருக்கின்ற வரைக்கும் எங்களின் பிரச்சார வேலையை அவர்களே சிறப்பாக செய்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்.

நான், சட்டமன்ற உறுப்பினர்கள், அண்ணன் கருணாநிதி அவர்கள், அண்ணன் வேலு அவர்கள் இங்கு இருக்கிறோம். கடந்த நான்கு வருடத்தில் சட்டமன்ற ஆளுநர் உரை படிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், நாங்கள் மூவரும் இதுவரைக்கும் ஆளுநரை சட்டமன்றத்தில் பார்த்து இருப்போமா என்றால் இல்லை. ஒரு படத்தில் வடிவேல் அவர்கள் பெண் பார்க்கப் போவார். `பெண்ணை அழைத்து வாருங்கள்' என்று சொல்வார். உட்கார்ந்திருப்பார். பெண்ணோ சட்டென்று வந்து சட்டென்று போய்விடும். எங்க பெண்ணை காணோம். மின்னல் வேகத்தில் போய் விடுகிறது என்று சொல்வார். அப்படித்தான் சட்டமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள் எல்லாம் ஆவலோடு காத்துக் கொண்டிருப்போம் ஆளுநரை பார்ப்பதற்காக. ஆனால் இதுவரைக்கும் ஒருமுறை கூட ஆளுநரைச் சரியாகப் பார்த்தது கிடையாது. எவ்வளவு வேகத்தில் வருகிறாரோ அவ்வளவு வேகத்தில் சென்று விடுவார். அப்படிப்பட்ட ஒரு ஆளுநரை நாம் பெற்று இருக்கிறோம்.

இதையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டிய, எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டிய ஒரு எதிர்க்கட்சி இருக்கிறதா என்று பார்த்தால், அவர்களும் வாயைத் திறக்க மாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் வாயைத் திறந்தார்கள் என்றால், அடுத்த நாளே அவர்களுக்கு ரெய்டு வந்துவிடும். ஆறு வருடத்திற்கு முன்பு சென்று பாருங்கள் தமிழ்நாடு என்ன நிலைமையில் இருந்தது என்று. இன்றைக்கு மட்டும் தி.மு.க. ஆட்சியில் இல்லாமல், அ.தி.மு.க. ஆட்சியில் அமர்ந்து இருந்தது என்றால் நாமெல்லாம் இன்றைக்கு இந்தியில் பேசிக் கொண்டிருந்திருப்போம். அ.தி.மு.க. அந்த வேலையை செய்திருக்கும். ஒன்றிய அரசு, டெல்லியில் இருந்து என்ன அனுப்புகிறார்களோ அவை அனைத்திலும் கையெழுத்து போட்டு, மாநில அரசின் அனைத்து உரிமைகளையும் விட்டுக் கொடுத்ததுதான் முந்தைய அதிமுக அரசு.

இதையெல்லாம் எதிர்த்து கேள்வி கேட்கக்கூடிய, இந்தியாவிலேயே ஒரே தலைவர், நம் கழகத் தலைவர் அவர்கள்தான். இந்த சூழ்ச்சிகளையெல்லாம் நம் கழகத் தலைவரின் தலைமையில் நாம் நிச்சயம் முறியடிப்போம்.

**வெற்றி பெற்றாக வேண்டும்!**

தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இன்றைக்கு இந்திய ஒன்றியத்தின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பவர் நம் கழகத் தலைவர் அவர்கள்தான். நம் கழக தலைவர் அவர்கள் 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றி பெற்றாக வேண்டுமென்று சொல்லி இருக்கிறார். அதைச் செய்து காட்ட வேண்டும் என்றால், இந்தத் திட்டங்களை எல்லாம், ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு நம் தமிழ்நாட்டிற்கு செய்கின்ற துரோகங்களை எல்லாம் நீங்கள் மக்களிடம் எடுத்துக் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றிலிருந்து ஒவ்வொருவரும், ஒவ்வொரு நொடியும் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கழக அணி இருநூறு தொகுதிகளுக்கு மேல் வெல்ல வேண்டுமென்றால், இங்கே இந்த தென்மேற்கு மாவட்டத்தில் மயிலை தொகுதி, அதேபோல் தியாகராய நகர் தொகுதி இந்த இரண்டு தொகுதியும் நம் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயம் வெற்றி பெற்றாக வேண்டும்.

அதை நீங்கள் செய்து காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. ஏழாவது முறையாக நம் கழகம் ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், அதேபோல் நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டும் என்றால், இன்றிலிருந்து நம் பிரச்சார, கழகப் பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

நலத்திட்டங்களை பெற்ற உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு என்றென்றும் வெல்லும் என்று கூறி இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்!**

சட்டமன்ற உறுப்பினர் மயிலை வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர், தியாகராய நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் கருணாநிதி என்கிற குட்டி, மயிலை மேற்கு பகுதி கழகச் செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான நந்தனம் மதி, நந்தனம் கிழக்குப் பகுதி கழகச் செயலாளர் முரளி, தியாகராய நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏழுமலை, மாமன்ற உறுப்பினர்கள் ரேவதி, கீதா முரளி, விமலா கிருஷ்ணமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வில்லவன், கோ.சு.மணி, தலைமைக்கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வி சவுந்தர்ராஜன், பாபு, வேலு சம்மந்தம், யோகேஷ் ரவி, எம்.ஆறுமுகம், வாசுதேவன், ஜெ.ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கர், மாவட்ட அவைத்தலைவர் மாவட்ட அவைத்தலைவர் அ.சந்திரசேகர், மாவட்ட கழகத் துணைச் செயலாளர்கள் நந்தனம் வேதா, மு.சத்யா, மலர், மாவட்ட பொருளாளர் என்.அன்பழகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், மாநில மாணவர் அணி இணை செயலாளர் எஸ்.மோகன், இலக்கிய அணி மாநில இணைச்செயலாளர் நந்தனம் நம்பி ராஜ், மீனவர் அணியின் மாநில துணைச் செயலாளர் மு.தம்பிதுரை, ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளர் தசரதன், மருத்துவ அணியின் மாநில துணைச் செயலாளர்கள் மருத்துவர் கலை கதிரவன், ஜெ.அருண், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் விக்னேஸ்வரன், தினேஷ் மாணிக்கம், அஸ்வின், இளைஞர் அணியின் பகுதி அமைப்பாளர்கள் ஜெகதீஷ் பாபு, திவான் குமார், இறையன்பன் குத்தூஸ், உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் , கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்டம் சாம்பவர்வடகரை பேரூர் தி.மு.க சார்பில் அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பெஞ்ச் டெஸ்க்,வாங்க சொந்த பணத்தில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் ரூபாய் 1 லட்சத்தை பள்ளி தலைமை ஆசிரியர் பிரபாவதியிடம் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாளை – சிவகங்கை மாவட்டத்தில்

# நகர , பேரூர், கிராமங்கள் தோறும் கொண்டாட முடிவு! மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, மார்ச் 4 -

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும்பொன் தா.கிருட்டினன் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழகத் துணைச் செயலாளர் த.. சேங்கைமாறன் வரவேற்றுப் பேசினார் இந்த கூட்டத்தில் மார்ச் 1ம் தேதி கழகத் தலைவர் திராவிட நாயகன் தமிழ்நாடு முதல மைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழாவை மாதம் முழுவதும் கொண்டாடுவது குறித்தும் பாக நிலை முகவர்கள் கூட்டம் குறித்தும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும் மாவட்ட கழகச் செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார் .

இந்த செயற்குழு கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம் .எல் .ஏ .கழகச் செய்தி தொடர்பாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

மார்ச் 1ம் தேதி கழகத் தலைவரும் திராவிட ஆட்சி மாடல் நாயகரும் தமிழ்நாடு முதல மைச்சர் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாதம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர், கழகங்கள் ஊராட்சிகளில் கழகக் கொடி ஏற்றி சிறப்பாக கொண்டாடுவது என்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல், கழக அரசின் நான்கு ஆண்டு மக்கள் நல சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறும் வகையில் தெருமுனை கூட்டங்கள் நடத்துவது என்றும் சாதனை விளக்க பொதுக் கூட்டங்கள் நடத்திட தீர்மானிக்கப் பட்டது.

மாவட்டத்தில் பாக நிலை முகவர்கள் கூட்டத்தினை விரைவாக நடத்திடுமாறு ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது. இந்த செயற்குழு கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி ,செயற்குழு உறுப்பினர் மேயர் எஸ்.முத்து துரை ,பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே. எஸ் .ரவி ,அம்பலமுத்து, நகர் கழக செயலாளர்கள் சி.எம். துரை. ஆனந்த் , பெரி.பாலா, க.பொன்னுச்சாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் சுப. சின்னத்துரை கே.. எஸ். ஆனந்த், நா. நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், நாகனி ரவி, பூபால சிங்கம், லெ.மூ. ரவிச்சந்திரன் ஆர்.எம். கென்னடி, யோக கிருஷ்ணகுமார், வே.ஆரோக்கிய சாமி, எம்.ஜெயராமன், திருமலை முத்துராம லிங்கம் , துரைராஜாமணி, எம் .அண்ணாதுரை எம்.ஏ. கடம்பசாமி,ஆறு. செல்வராஜன், வே .தமிழ்மாறன், பூமணி, கே.பாலசுப்பிரமணியன், எஸ்.சண்முக வடிவேல் விராமதி மாணிக்கம் ,பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர்வேல், ராசு, அசோக், ஆர். கார்த்திகேயன், நாகூர் கனி,பி.ஏ.நஜ்மூதீன் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துகுமார் , மாவட்ட பிரதிநிதி சேவியர் மற்றும் அணி நிர்வாகி கள், ஒன்றிய, நகர,பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். முடிவில் காரைக்குடி மாநகர செயலாளரும் துணை மேயருமான நா. குணசேகரன் நன்றி கூறினார்.

### சாம்பவர் வடகரை பேரூர்க் கழகம் சார்பில் – முதல்வர் பிறந்த நாள்:

# அரசு பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ரூ.1 லட்சம் வழங்கினார்!

தென்காசி, மார்ச் 4 -

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி தெற்கு மாவட்டம் சாம்பவர்வடகரை பேரூர் தி.மு.க சார்பில் அரசு பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஒரு லட்சம் ரூபாய் வழங்கினார்.

சாம்பவர்வடகரை பேரூர் தி.மு.க சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா செங்கோட்டை ஒன்றிய செயலாளர் ரவி சங்கர் தலைமையில் பேரூர் தி.மு.க செயலாளர் முத்து, பேரூராட்சி தலைவர் சீதா லட்சுமி முத்து, துணைத் தலைவர் நாலாயிரம் என்ற பாப்பா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் பிரபாவதி அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பெஞ்ச், டெஸ்க் வாங்க தனது சொந்த பணத்தில் ரூபாய் 1 லட்சத்தை பள்ளி தலைமை ஆசிரியர் பிரபாவதியிடம் வழங்கினார்.

நிகழ்வில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் சண்முகவேல், துணைத் தலைவர் சுப்பிரமணியன், கவுன்சிலர் சுடலைமுத்து, முன்னாள் பேரூர் செயலாளர் ராமச்சந்திரன், கழக நிர்வாகிகள் முத்துக்குமார், ராமகிருஷ்ணன்,விஜயகுமார், சுப்பையா, மாணிக்கம், ஐயப்பன், அருணா, பலவேசம், பசுபதி, செல்வின் அப்பாதுரை,சாமி தேவர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### இராமநாதபுரம் – முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில்

# மாவட்ட இளைஞர் அணி சார்பில் பா.ஜ.க. அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



இராமநாதபுரம், மார்ச் 4 -

இராமநாதபுரம் மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க இளைஞர் அணி சார்பில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெறுகிறது என மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர், இளந்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது

இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் இராமநாதபுரம் அரண்மனை முன்பாக இன்று (04.03.2025 ) மாலை 5 மணி அளவில் நடைபெறும் கண்டன பொதுக்கூட்டத்திற்கு தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட சிறப்பு பேச்சாளர்கள் நாஞ்சில் சம்பத் மற்றும் காயத்ரி கலந்துகொண்டு சிறப்புரையாற்ற இருக்கிறார்கள்.

நாளை (05.03.2025 ) முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் கண்டன பொதுக்கூட்டம் கடலாடி அண்ணா திடல் பேருந்து நிலையம் அருகே நடைபெறும் கண்டன பொதுக்கூட்டத்தில் கம்பம் செல்வேந்திரன் மற்றும் முகமது அஸ்மத் ஆகிய சிறப்பு பேச்சாளர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற இருக்கின்றனர்

ஆகவே இராமநாதபுரம் மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, வார்டு கழக, கிளை கழக நிர்வாகிகள், அவரவர் எல்லைக்குட்பட்ட இளைஞர் அணியினர் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரையும் மேற்கண்ட பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளை செய்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி நகரப் பகுதியில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் நாராயண பாண்டியன், தேனி நகர மன்ற தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், துணைத் தலைவர் வழக்கறிஞர் செல்வம் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.